**Tamil Sudar, August 27, 2011**

## கோவையில் நடைபெற்ற

# டிசிஎஸ் ஐடி வினாடி வினா போட்டி

**கோவை,ஆக.26-**

டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் (டிசிஎஸ்) நிறுவனம் ஏற்பாடு செய்திருந்த டிசிஎஸ் ஐடி க்விஸ் போட்டியில் கோவை மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து 85-க்கும் மேற்பட்ட பள்ளிகள் இதில் பங்கேற்றன.

பள்ளிகளுக்கு இடையே நடத்தப்படும் இந்தியாவின் மிகப்பெரிய ஐடி க்விஸ் போட்டியான டிசிஎஸ் ஐடி விஸ்



வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை கோவை எலஎம்டபிள்யுவின் நிர்வாக இயக்குனா சஞ்சய் ஜெயரத்னவேலு மற்றும் ஐஓஎன், டிசிஎஸ் குளோபல் ஹெட் வி.ராமசாமி ஆகியோர் வழங்கினர்கள்.

கோவை பதிப்பில் 1800-க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர். கோவை ஆர்எஸ் புரத்தில் உள்ள மாநகராட்சி கலை அரங்கத்தில் இந்தப் போட்டிகள் வியாழக்கிழமை நடைபெற்றது. முதல் சுற்று மற்றும் அதைத் தொடர்ந்து நடைபெற்ற இறுதிச் சுற்றில் ஊட்டியைச் சேர்ந்த லாய்டு லா மெமோரியல் பள்ளியைச் சேர்ந்த ஹரிஹரசுதன் மற்றும் மணிகண்டன் வெற்றி பெற்று கேலக்சி டேப்ளட் மற்றும் டிஜிட்டல் கேமிரா ஆகியவற்றுடன் வெற்றிக் கோப்பையை தட்டிச் சென்றனர். இரண்டாவது இடத்தை ஜி.டி. மெட்ரிக் பள்ளியைச் சேர்ந்த நந்தகிஷோர் மற்றும் வித்யபிரசாத் ஆகியோர் ஐபாட் டச் மற்றும் கோப்பையை பெற்றனர். வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை கோவை எல்எம்டபிள்யுவின் நிர்வாக இயக்குனர் சஞ்சய் ஜெயரத்னவேலு மற்றும் ஐஓஎன், டிசிஎஸ் குளோபல் ஹெட் வி.ராமசாமி ஆகியோர் வழங்கினர்கள்.

டிசிஎஸ் ஐடி க்விஸ் போட்டியில் 8 முதல் 12 வகுப்பு வரையில் பயிலும் அனைத்து மாணவர்களும் தகுதி பெற்றவர்களாவர். இதற்கு நுழைவு கட்டணம் கிடையாது.